# ஸ்ரீ சிவசுப்ரமணிய நாடார் பொறியியல் கல்லூரி
# சாரல் தமிழ் மன்றம்
# பொங்கல் பண்டிகை கொண்டாட்டம்

நமது கல்லூரியின் சாரல் தமிழ் மன்ற மாணவர்கள் 11-01-2023 புதன் கிழமையன்று இயந்திரவியல் துறையின் பின்புறம் உள்ள பேருந்துகள் நிறுத்தும் இடத்தில் பொங்கல் விழாவினை மிகச் சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தனர். பொங்கல் விழா நடந்த இடத்தை மாணவர்கள் வண்ண வண்ணக் காகிதங்களைக் கொண்டு அழகிய தோரணங்களாலும் பல வண்ணக் கோலங்களாலும் அலங்காரப்படுத்தியிருந்தார்கள். இந்த பொங்கல் விழா கொண்டாட்டத்தில் சுமார் 250 மாணவர்கள் கலந்துகொண்டார்கள்.







காலை 9:30 மணிக்கு தமிழ் மன்றப் பொறுப்பாசிரியர் திரு.கு.முருகேசன் அவர்கள் முன்னிலையில் தமிழ் மரபுப் படி மண் பானையில் பொங்கல் வைத்து மாணவர்களின் குலவை சத்தத்துடனும் பொங்கலோபொங்கல் என்ற உற்சாக முழக்கத்துடனும் பொங்கல் வைக்கப்பட்டது. பொங்கல் விழாவில் இயந்திரவியல் துறையின் பேராசிரியர்கள் திரு. செல்வராஜ், திரு. பாபு, திரு. ஆல்பின்ஸ், திரு. அருண்பிரகாஷ் , திருமதி இராஜேஸ்வரி மற்றும் திரு.ஆனந்த் ரோனல்ட் ஆகியோர்கள் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தார்கள். பொங்கல் வைத்தபின் மாணவர்களின் மனநல ஆலோசகர் திருமதி நந்தா ஸ்ரீனிவாசன் அவர்கள் முன்னிலையில் பூஜை செய்து பொங்கல் விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் பொங்கல் பகிர்ந்தளிக்கப்பட்டது.





பொங்கலைத் தொடர்ந்து மாணவர்கள் கிராமியப் பாடலுக்கு நடனமாடினார்கள். கயிறு இழுத்தல், உறியடித்தல், எலுமிச்சை கரண்டியுடன் நடத்தல் மற்றும் இசை நாற்காலி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டது. அனைத்து போட்டிகளிலும் மாணவ மாணவிகள் மிக்க ஆர்வத்துடன் கலந்துகொண்டார்கள்.









அனைவரின் ஒத்துழைப்போடும் பொங்கல் விழாக் கொண்டாட்டம் நண்பகல் 12:30 மணிக்கு நிறைவுபெற்றது. பொங்கல் விழா கொண்டாட்டத்திற்கு சாரல் தமிழ் மன்றத்தின் மாணவப் பொறுப்பாளர் இறுதி ஆண்டு மாணவி செல்வி. காவியா அவர்கள் மாணவர்களை ஒருங்கிணைத்து விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார். மாணவர்கள் , ஆசிரியர்கள், கல்லூரி முதல்வர் மற்றும் கல்லூரி நிர்வாகம் என அனைவரின் ஒத்துழைப்போடும் பொங்கல் விழா வெற்றிகரமாக கொண்டாடப்பட்டது. அனைவருக்கும் சாரல் தமிழ் மன்றத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்புடன்,
கு. முருகேசன்
சாரல் தமிழ் மன்ற பொறுப்பாசிரியர்
14-01-2023